**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 73/2024** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed byTmt.S.Sangeetha, Assistant of this court on 02.03.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | கோபி |
| Father Name: | : | முத்துசாமி |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், 2009 ம் ஆண்டு கிரையப்பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் கமலம், முருகேசன் மற்றும் பாலசுப்ரமணி ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் சர்வே எண்கள் என்னவென்றால் ச.எண்.249/9, 248/2, 252/7A, 252/7C ஆகும். மேற்படி சர்வே எண்களின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 248/2 ல் 2.18 1/2 ஏக்கர், 249/9 ல் ஏக்.0.86 செண்ட், 252/7A ல் ஏக்.75 செண்ட் மற்றும் 252/7C ஏக்.66 செண்ட் ஆகமொத்தம் 3 ஏக்கர் 94 1/2 செண்ட்ஆகும். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வாறு சம்மந்தப்பட்டார்கள் என்றால் கமலம் என்பவர் மேற்படி கருப்பண்ண கவுண்டரின் மகள் ஆவார். முருகேசன் மற்றும் பாலசுப்ரமணி ஆகியோர்கள் போர்ஜரியாக கமலம் என்பவரிடம் கிரையம் பெற்றவர்கள் ஆவார்கள். மேற்படி கருப்பண்ண கவுண்டருக்கு தாவா சொத்து ஆதியில் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் 1968 ல் சுயமாக சம்பாதித்த சொத்தாகும்.

மேற்படி கருப்பண்ண கவுண்டர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. 1987 ம் வருடம் இறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். மேற்படி கருப்பண்ண கவுண்டருக்கு 1 ம் பிரதிவாதியான கமலம் மட்டும்தான் ஒரே மகள் என்றால் சரிதான். இவ்வழக்கில் 2, 3 பிரதிவாதிகளான முருகேசன் மற்றும் பாலசுப்ரமணியம் கடந்த 21.10.2009 ம் தேதியன்று தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான் போர்ஜரியாக கிரையம் பெற்றுள்ளார்கள்.

மேற்படி கருப்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஒரு வீரப்பன் என்பவரின் வாரிசுகளிடமிருந்து கடந்த 08.08.2024ம் தேதியன்று கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

**Sd/-E.Ridhula** **Sd/Gobi**
**DM,SDM**